50—

வாடிப்பட்டியில் கூட்டுறவு நூற்பாலை அமைத்தல்

*9097—திரு. ஏ. எம். பரமசிவன் : மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம் பின்தங்கிய தாலுக்காவான வாடிப் பட்டியில் கூட்டுறவு நூற்பாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை —

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் :

வாடிப்பட்டியில் கூட்டுறவு நூற்பாலை அமைக்கும் கருத்துரு எதுவும் அரசிடம் இல்லை.

55—

பள்ளி மாணவர்களுக்கு விடுமுறைக் காலங்களில் தொழிற் பயிற்சி அளித்தல்.

*12723—திரு. சி. சுவாமிநாதன் :

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பள்ளி மாணவர்களுக்கு விடுமுறைக் காலங்களில் தொழிற் பயிற்சி அளிக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத்துறை அமைச்சர் :

இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS